(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2021 |
| Deposition Of Witness for | : | PW11 |
| Name | : | **திரு.மெகர் அலி** |
| Father's Name | : | திரு.அப்துல் சலாம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd May 2026.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது தேவகோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் முதல்நிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.02.2020- ம் ஆண்டு சாக்கோட்டை பிர்கா வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தேன். வருவாய் ஆய்வாளர் பணி என்பது இணைய வழி சான்றுகளை (வருமான சான்றிதழ், வாரிசு சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ்) ஆகியவற்றிற்கு ஆவணங்களின் அடிப்படையில்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.22 15:12:09 +0530

Approval செய்வதாகும், சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டால் காவலர்களுக்கு துணையாக உதவி செய்தல், சட்டத்திற்கு முரணாக மணல் மற்றும் குவாரி போன்ற கனிம வளங்களை திருட்டுத்தனமாக எடுப்பதை பாதுகாப்பது, அரசு நிலத்தில் உள்ள மரங்களை சட்ட விரோதமாக வெட்டுதலை தடுத்தல் ஆகும்.

2. இலுப்பக்குடி கிராமம், லட்சுமி நகர், எண்.1/120 என்ற விலாசத்தில் வசித்து வரும் திரு.முருகன் என்பவரின் மகன் திரு.சுப்பு என்பவருக்கு வருமான சான்று வாங்குவதற்கு இணைய வழி மூலமாக பதிவு செய்யப்பட்டிருந்த விண்ணப்பத்தினை பெற்று அந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த வருமான அளவான ரூ.22000/—ஐ குடும்ப ஆண்டு வருமானமாக ரூ.96000/—என்பதை அப்போதைய சாக்கோட்டை வருவாய் ஆய்வாளருக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. கடந்த 06.02.2020—ம் தேதி கணினி வழியாக வருமானசான்று பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளார், அதனை இலுப்பக்குடி கிராம நிர்வாக அலுவலர் பெற்று சாக்கோட்டை பிர்கா வருவாய் ஆய்வாளருக்கு கடந்த 08.02.2020ம் தேதி கணினி வழியாக அனுப்பி வைத்துள்ளார்,பின்பு சாக்கோட்டை வருவாய் ஆய்வாளரால் வாதிக்கு ஆண்டு குடும்ப வருமானம் ரூ.96000/— என்று பரிந்துரை செய்து

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.22 15:12:18 +0530

13.02.2020–ம் தேதி மண்டல துணை வட்டாட்சியருக்கு அனுப்பி வைத்துள்ளார். அதன்படி மண்டல துணை வட்டாட்சியர் வருமான சான்றினை கடந்த 13.02.2020 ம் தேதியன்றே வழங்கியுள்ளார். இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.22 15:12:26 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.